RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 264 | செப்டம்பர் 28, 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்: மதுரையில் இன்று முதல்வர் தொடங்கி வைக்கிறார்

மதுரை, செப்.28-

அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு 1 கிராம் தங்க மோதிரம் வழங்கும் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டம் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் இன்று (28-ந்தேதி) தொடங்கி வைக்கப்படுகிறது.

த.வெ.க. அரசின் தேர்தல் வாக்குறுதிகளில் முக்கியத்துவம் பெற்ற இத்திட்டம், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளின் பிறப்பை நினைவுகூரும் வகையிலும், தாய்மையின் மகிழ்ச்சியை கொண்டாடும் வகையிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

ரூ.755 கோடி ஒதுக்கீடு

இத்திட்டத்துக்காக ஆண்டுக்கு ரூ.755.83 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் 22-ந்தேதி முதல் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பாரம்பரியத்தில் தாய்மாமன் சார்பில் வழங்கப்படும் சீர் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் இத்திட்டத்துக்கு 'தாய்மாமன் தங்க மோதிரம்' என பெயரிடப்பட்டுள்ளது.

1.28 லட்சம் மோதிரங்கள்

முதற்கட்டமாக 4 மாதங்களுக்கு தேவையான 1,28,499 தங்க மோதிரங்களை கொள்முதல் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் முதற்கட்டமாக 89,955 தங்க மோதிரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு தயாராக உள்ளன.

மதுரையில் நடைபெறும் விழாவுக்கான முன்னேற்பாடாக 1,106 தங்க மோதிரங்கள் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கடந்த வாரம் கொண்டு செல்லப்பட்டுள்ளன.




மதுரைக்கு மாற்றப்பட்ட தொடக்க விழா

முதலில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் திட்டத்தை தொடங்கி வைக்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அங்கு தெருக்கள் குறுகலாக இருப்பதாலும், கூட்டத்தை கட்டுப்படுத்துவது மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் சிரமம் ஏற்படும் என்பதாலும் தொடக்க விழா மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது.

முதலமைச்சர் விஜய் பங்கேற்பு

திட்ட தொடக்க விழாவில் முதலமைச்சர் விஜய் கலந்துகொண்டு திட்டத்தை தொடங்கி வைக்கிறார். தொடர்ந்து பிரசவ வார்டு பகுதிக்கு சென்று, பிறந்த குழந்தைகளுக்கு தனது கைகளால் தங்க மோதிரம் அணிவிக்கிறார்.

முதலமைச்சர் வருகையையொட்டி மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை வளாகத்தில் சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. பனகல் சாலையில் புதிய தார்ச்சாலை அமைக்கப்பட்டதுடன், மருத்துவமனை வளாகத்தில் பேவர் பிளாக் கற்கள் பதிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், சேதமடைந்த கட்டிடப் பகுதிகள் சீரமைக்கப்பட்டு, குப்பைகள் மற்றும் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. முதலமைச்சர் பயணிக்கும் சாலைகளில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, இருபுறமும் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

107 அரசு மருத்துவமனைகளில் வழங்க ஏற்பாடு

தமிழகம் முழுவதும் உள்ள 107 அரசு மருத்துவமனைகளிலும் இத்திட்டத்தின் கீழ் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் மூலம் மோதிரங்கள் வழங்கப்பட உள்ளன.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் என்.ஆனந்த், அருண்ராஜ், நிர்மல்குமார் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொள்கின்றனர்.

# கேள்விக்குறியான தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் - கார்த்தி சிதம்பரம் விமர்சனம்

சென்னை, செப்.28-

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் கேள்விக்குறியாகியுள்ளது என்பது பாஜக கூட்டணிக் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து, கேள்வி கேட்பதில் இருந்தே தெரிகிறது என காங்கிரஸ் மக்களவை உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் தெரிவித்தார்.

எழுத்து அமைப்பு மற்றும் கவிதா பதிப்பகம் இணைந்து நடத்தும் சௌந்தரா கைலாசம் இலக்கியப் பரிசு வழங்கும் விழா சென்னை தி.நகரில் உள்ள சர்பிடி தியாகராயர் அரங்கில் இன்று (செப்.27) நடைபெற்றது.

முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தலைமையில் எழுத்து மற்றும் கவிதா பதிப்பகம் சார்பில் 2025ஆம் ஆண்டிற்கான சௌந்தரா கைலாசம் இலக்கியப் பரிசு ரூ.2 லட்சம் பெற்ற எழுத்தாளர் செ.ஏக்நாத்ராஜ் எழுதிய 'சடவு' நூலின் முதல் பிரதியை இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் முன்னாள் தலைவர் மயில்சாமி அண்ணாதுரை வெளியிட்டார். அதனை கவிஞர் வைரமுத்து பெற்றுக் கொண்டார்.

இதில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம், முன்னாள் காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




காகித பத்திரிக்கை எதிர்காலம் கேள்விக்குறி

அப்போது மேடையில் பேசிய ப.சிதம்பரம், "இளைய எழுத்தாளர்கள் பிரபலமானவர்கள் அல்ல, பரிசு பெற்றவர்கள் அல்ல, வளர்ந்து வரும் எழுத்தாளர்கள். மூன்று நான்கு நூல்களை எழுதியிருப்பார்கள். அவர்களை வெளி உலகிற்கு காட்ட வேண்டும் என்பது தான் எழுத்து தமிழ் இலக்கிய அமைப்பின் நோக்கம்" என்றார்.

அவரை தொடர்ந்து பேசிய கவிஞர் வைரமுத்து, "எழுத்தாளர்களுக்கு இது போதாத காலம். பத்திரிக்கைகள் எண்ணிக்கையில் சரிந்துவிட்டது. பத்திரிக்கைகளை விற்பதற்கு போராடி வருகிறார்கள். வாசிப்பாளர்கள் குறைந்துவிட்டனர். தொழில்நுட்பம் வாசிப்பை விழிங்கிவிட்டது. இன்னும் எத்தனை நாட்களுக்கு காகித பத்திரிக்கை இருக்கும் என்று தெரியவில்லை. 30 நொடியில் ரீல் பார்க்கின்றனர். 30 நொடிக்கு மேல் வாசிப்பாளர்களுக்கு பொறுமை இல்லை.

இனி தங்கள் படைப்புகளை சின்னத்திரை மூலமாகவும், திரைப்படம் மூலமாகவும் சொல்ல வேண்டும் என்ற நிலைக்கு தள்ளிவிட்டனர். எந்த தொழில்நுட்பமும் நன்மையோடும், தீமையோடும் தான் உருவாக்கப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு பெரும் சவாலாக உள்ளது. மனிதனின் சுயத்தை, தனி உணர்ச்சியை காப்பாற்ற வேண்டும்" என்றார்.

மின்வெட்டு புதுசு அல்ல

அதன் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய கார்த்தி சிதம்பரம், "முதலமைச்சரின் நல்ல செயல்பாடுகள் தான் இடைத்தேர்தலில் பிரதிபலிக்கும். வேட்பாளரை பொறுத்து அல்ல. முதலமைச்சரின் செயல்பாடு நன்றாக உள்ளது. மின்வெட்டு என்பது இன்று நேற்று அல்ல, காலங்காலமாக தொடர்ந்து கொண்டேதான் வருகிறது. கடந்த 50 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் மின் நிர்வாக வரலாறு, கட்டமைப்பு, செயல் திட்டங்கள் எவ்வாறு உள்ளது என்பதை ஆய்வு செய்ய வேண்டும். பொதுவாக, கடந்த 3 மாதமாக தான் மின்தடை நிலவுகிறது என்று கூற முடியாது.

கூட்டணி கட்சிகளே கேள்வி கேட்கும் நிலை

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு கேள்விக்குறியாகியுள்ளது என்பது வெளிப்படையாக தெரிகிறது. ஆணையத்திற்கு உள்ளே இருக்கும் அதிகாரிகளே முறைகேடு நடந்துள்ளதாக தெரிவித்துள்ளனர். 14 முறை அவர்கள் கேள்வி கேட்டும் அதற்கான பதில் இல்லாமல் தலைமைத் தேர்தல் அதிகாரி தன்னிச்சையாக முடிவெடுத்துள்ளார் என்பது ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் என்பது தன்னிச்சையான அமைப்பு. அதனை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், இன்றைக்கு தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் கேள்விக்குறிக்கு உள்ளாகியுள்ளது என்பது பாஜக கூட்டணிக் கட்சிகள் தங்கள் எதிர்ப்பை தெரிவித்து கேள்வி கேட்பதில் இருந்தே தெரிகிறது. பாஜக கூட்டணிக் கட்சிகளும் தேர்தல் ஆணையத்தின் மீதுள்ள சந்தேகத்தை வெளிப்படுத்தி, உண்மைத்தன்மையை வெளிக்கொண்டு வர வேண்டும் எனக் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டனர்.

சென்னையில் வேண்டாம்

புதிய தலைமைச் செயலகம் பட்டினப்பாக்கத்தில் அமைக்கப்படுவதை விட, அதிகார மையம் அனைத்தும் சென்னையில் இருந்து செயல்படக்கூடாது. திருச்சி, கோவை, மதுரை, சேலம் என முக்கிய நகரங்களிலிருந்து அதிகாரம் மையங்கள் பிரிந்து செயல்பட வேண்டும். ஆண்டுக்கு 2 முறை மட்டுமே நடைபெறும் சட்டப்பேரவை கூட்டம், அமைச்சரவை கூட்டம் உள்ளிட்டவை ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்பட வேண்டும்" என்று தெரிவித்தார்.

# "தீவிரவாதத்துக்கு எதிராக தாக்குதலை மேற்கொள்ள இந்தியா தயார்" - ராஜ்நாத் சிங்

புதுடெல்லி, செப்.28-

"தீவிரவாதத்துக்கு எதிராக தாக்குதலை மேற்கொள்ள இந்தியா தயார் நிலையில் உள்ளது," என்று தனியார் தொலைகாட்சி நிறுவனம் நடத்திய நிகழ்வில் பங்கேற்ற பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிந்து நதி நீர் பாகிஸ்தானுக்குள் செல்வதை தடுத்து திசை திருப்பும் இந்தியாவின் செயல் போர் நடவடிக்கையாகக் கருதப்படும் என்று ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் ஆற்றிய உரையில் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்திருந்தார். அதற்கு இந்தியா பதிலடி கொடுத்தது. இந்நிலையில், ராஜ்நாத் சிங் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

"இந்தியா அமைதியை விரும்புகிறது. ஒருபோதும் போரை விரும்பவில்லை. உலகில் எந்தவொரு வெளிநாட்டின் நிலப்பகுதியையும் இந்தியா கைப்பற்ற விரும்பவில்லை. இந்தியா யாரையும் அச்சுறுத்த கூட விரும்பவில்லை.

இருப்பினும் இந்திய தேசம் அதன் பாதுகாப்பினை எந்தவொரு சூழலிலும் விட்டுக்கொடுக்காது. இந்தியா பேச்சுவார்த்தையை நம்புகிறது. ஆனால், எந்தவொரு நாடும் இந்தியாவுக்கு எதிராக தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தால் அத்துடன் பேச்சுவார்த்தை என்பது முடிவுக்கு வருகிறது. இது குறித்து எஸ்சிஓ மாநாட்டில் பிரதமர் மோடி தெளிவுப்படுத்தி உள்ளார்.

அண்டை நாடுகள் தீவிரவாதத்தை அரசு கொள்கையாக தொடரும் வரை, தீவிரவாதத்துக்கு எதிரான தாக்குதலுக்கு இந்தியா தயாராக உள்ளது. இதை நாங்கள் அண்டை நாட்டுக்கும், உலகுக்கும் தெவித்துக் கொள்கிறோம். இந்தியா அந்த நடவடிக்கைக்கு தயாராக உள்ளது" என்று ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

# பாலியல் குற்றங்கள், கொலை அதிகரிப்பு தமிழகத்தில் அனைத்து இடங்களிலும் ஊழல் தலை விரித்து ஆடுகிறது

திருவெற்றியூர், செப்.28-

தமிழகத்தில் பாலியல் குற்றங்கள், கொலை, கொள்ளை அதிகரித்துள்ளது. ஊழல் இல்லை என்று சொல்கின்றனர். ஆனால், அனைத்து இடங்களிலும் ஊழல் தலைவிரித்து ஆடுகிறது என்று தமிழிசை சவுந்தரராஜன் குற்றம் சாட்டினார்.

பிரதமர் மோடியின் பிறந்த நாளை முன்னிட்டு வடசென்னை கிழக்கு மாவட்ட பாஜ சார்பில் திருவொற்றியூர் நகர்ப்புற சுகாதார மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட துணை தலைவர் ஜெய்கணேஷ் தலைமையில் நடந்தது. முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் பெட்டுடன் கூடிய குழந்தைகளுக்கான கிட் மற்றும் தாய்மார்களுக்கு பழம் போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தமிழிசை சவுந்தரராஜன் கூறியதாவது:முதலமைச்சர் விஜய் தமிழக மக்கள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும். தமிழகத்தில் பாலியல் குற்றங்கள், கொலை, கொள்ளை அதிகரித்துள்ளது. ஊழல் இல்லை என்று சொல்கிறீர்கள். ஆனால் அனைத்து இடங்களிலும் ஊழல் தலைவிரித்து ஆடுகிறது. நாங்கள் தனித்தனியாக ஓட்டுக்கு பணம் கொடுக்க மாட்டோம், ஒட்டுமொத்தமா எம்எல்ஏவை விலைக்கு வாங்கி விடுவோம் என்ற சூழ்நிலை தமிழ்நாட்டில் இருக்கிறது. தமிழகத்திற்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்ற பிரதமருக்கு தமிழக முதல்வர் வாழ்த்தும் நன்றியும் சொல்ல வேண்டுமே தவிர திமுகவும் பாஜவும் ஒன்று என்று குழப்பிக் கொண்டிருக்கிறார். இந்த குழப்பம் எல்லாம் உங்களுக்கு தேவை இல்லை.

மக்கள் பிரச்னைகளை சரியாக பார்த்து அணுகவும். பாஜவின் மீது குற்றம் சொல்வதற்கு எதுவுமே இல்லை. அவரை சங்கி என்று சொல்லிவிட போகிறார்கள் என்று எதையோ ஒன்று சொல்ல வேண்டும் என்று சொல்லுகிறார். மதுராந்தகம் இடைத்தேர்தலில் வேட்பாளர் நான் பெட்டியை வாங்கவில்லை என்று கூறுகிறார். எதனால் ராஜினாமா செய்தீர்கள். ஆதவ் அர்ஜுனா வேட்பாளரை பக்கத்தில் வைத்துக் கொண்டு இங்கு சாலை போடவில்லை, குடிநீர் வசதி இல்லை. இதற்கு முன்பு உள்ள சட்டமன்ற உறுப்பினர் என்ன செய்தார் என்று கேட்கிறார். தம்பி அவர்தான் உங்கள் பக்கத்தில் நிற்கின்ற முன்னாள் எம்எல்ஏ அது கூட தெரியாமல் தான் நீங்கள் அரசியல் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

அவர்கள் செய்தது தவறு, மக்கள் தீர்ப்பை உதாசீனப்படுத்தியது தவறு, இரண்டு இடைத்தேர்தல்களும் வந்திருக்கக் கூடாது. தேர்தலில் ஏற்கனவே வெற்றி பெற்று ராஜினாமா செய்தவர்கள் தோற்க வேண்டும்.தவெக அரசு எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. விவசாய கடன் தள்ளுபடி நிறைவேற்றவில்லை. ஆறு சிலிண்டர் தருவேன் என்று கூறி அதுவும் நிறைவேற்றவில்லை. மறுபடியும் அவர்கள் ஓட்டு கேட்க போயிருக்கிறார்கள். மக்கள் சரியான பாடம் புகட்ட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் வாரவிடுமுறையை முன்னிட்டு குவிந்த ஆயிரக்கனக்கான பக்தர்கள்!

திருவண்ணாமலை, செப்.28-

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் வார விடுமுறையை யொட்டி ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்த நிலையில் சுமார் 4மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்துவருகின்றனர். புரட்டாசி மாத பௌர்ணமி முடிந்த நிலையில், இன்று ஞாயிறு விடுமுறை தினம் என்பதால் வெளிமாநில பக்தர்கள் கிட்டதட்ட இரவு முதல் குவிந்து இன்று நான்கு மணிநேரம் காத்திருந்து தற்போது வரை சாமி தரிசனம் செய்துவருகிறார்கள்.




புரட்டாசி மாத பௌர்ணமியானது வெள்ளிக்கிழமை இரவு 10.44 மணிக்கு தொடக்கி நேற்று சனிக்கிழமை இரவு 11மணிவரை நீடித்தது. இந்த பௌர்ணமியில் லட்சக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலைக்கு வருகை தந்து அண்ணாமலையாரை வழிபட்டு சொந்த ஊர்களுக்கு சென்றனர். இருப்பினும் ஞாயிறு விடுமுறை என்பதால் இன்று காலை முதலே, ஆந்திரா. கர்நாடக, கேரளா போன்ற வெளிமாநில பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. அதிகாலை 5.30 மணிக்கு நடை திறக்கப்பட்டு பக்தர்கள் காலை 6மணி அளவில் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட்டன.

பொது தரிசனத்துக்கு வரக்கூடிய பக்தர்கள் நான்கு மணிநேரம் காத்திருந்து ராஜகோபுரம் வழியாக உள்ளே சென்று அண்ணாமலையாரையும், உண்ணாமலையாரையும் வழிபாடு பிரம்மஜன கோபுரம் வழியாக வெளியே சென்றனர். அதேபோல 50ரூபாய் தரிசனக் கட்டணம் வழியாக வரக்கூடிய பக்தர்களை, வடக்கு கோபுரம் வழியாக உள்ளே சென்று சாமி தரிசனம் செய்து பிரேமஜன கோபுரம் வழியாக வெளியேச்சபட்டனர் .

நீண்ட வரிசையில் காத்திருக்கின்ற பக்தர்களுக்கு கோயில் நிர்வாகம் சார்பில் நீர், மோர் பழவகைகள் மற்றும் பிஸ்கட்டுகள் வழங்கி வருகின்றன. அதே போல் வரிசையில் நின்று வரக்கூடிய பக்தர்களுக்கு காற்றோட்ட வசதிக்க்காக ராட்சத மின்விசிறிகள் ஏற்பாடு செய்து பக்தர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

அதேபோல கடந்த பௌர்ணமி முதல் இன்றைய தினம் பிற்பகல் வரை அண்ணாமலையார் கோயிலில் மட்டும் சுமார் ஒரு லச்சத்து ஐம்பத்தாயிரம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளதாக கோயில் நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் தேர்வு

நீலகிரி, செப்.28-
குன்னூர் நகராட்சிக்கு உட்பட்ட காந்திபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில், பள்ளி மேலாண்மைக்குழு கூட்டம் நடைபெற்றது. கடந்த ஆண்டு பள்ளி மேலாண்மைக்குழுவினரின் பொறுப்பு காலம் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, புதிய நிர்வாகிகள் தேர்வு நடை பெற்றது.

இக்கூட்டத்திற்கு, பள்ளித் தலைமையாசியர், மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு அலுவலரும், இதர ஆசிரியர்களும்,பெற்றோர்களும், சமூக ஆர்வலர் டேவிட் ஆகியோர் பங்கேற்றனர். இதில் இந்த கல்வி ஆண்டிற் க்கான புதிய தலைவர், மற்றும் உறுப்பினர்களைத்தேர்வு செய்தனர்.

இக்கூட்டத்தில் எஸ் எம் சி குழுவினரின் பொறுப்புகளைப்பற்றிய ஆலோசனைகளை ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.இறுதியில் மேலா ண்மைக்குழு உறுப்பினர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது முடிவில் பள்ளி ஆசிரியர் சுமதி நன்றி கூறினார்.



# நாட்டு நலப்பணி திட்டம் மாணவர்களுக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி

தேனி, செப்.28-
தேனி மாவட்டம் தே.சிந்தலச்சேரி கத்தோலிக்க சமுதாயக் கூடத்தில் பள்ளிக்கல்வி இயக்குனரகம், சென்னை.மாவட்ட முத ன்மை கல்வி அலுவலகம், தேனி இவர்களின் ஒத்துழைப்புடன் மாணவர்களுக்கான நாட்டு நலப்பணி திட்டம் 2026-2027 க்கான சிறப்பு முகாம் நடைபெற்றது.

முகாம் திட்ட அலுவலர் மணிமாறன்வரவேற்பாட்டினார். இந்த முகம் 7 நாட்கள் நடைபெறும், முதல் நாளான இன்று மாணவர்களுக்கு பேரிடர் மேலாண்மை பயிற்சி ஆத்தமித்ரா பேரிடர் கால நண்பன் சுருளிப்பட்டி ரா.அன்பு ராஜா பேரிடர் குறித்த பாடம் நடத்தினார்.

அதில் பேர்டர் என்றால் என்ன?பேரிடர் குறைப்பு என்றால் என்ன?

ஓசோனில் இருந்து வரக்கூடிய புறஊதா கதிர்களால் ஏற்படும் தீமை என்ன?சூப்பர் எல்நினோ என்றால் என்ன, அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும்மாணவர்களிடத்தில் எடுத்துக்கூறி தமிழகத்தின் மாநில மரமான பனை மரங்களைப் பற்றியும்,பனை மரங்களால் கிடைக்கப்படும் பலன்கள் பற்றியும் எடுத்துக் கூறி மாணவர்களுடன் அருகில் இருந்த கன்மாயில் 100 பனை விதைகள் நடவு செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து கலசலிங்கம் இறுதி ஆண்டு வேளாண் கல்லூரி மாணவர்கள் மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பயன்படுத்துவதனால் ஏற்படும் தீமைகளை பற்றி எடுத்துக் கூறியும், போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு உறுதி முடியும் ஏற்கப்பட்டது.



■ நீலகிரி மாவட்டம் உதகை பிரிக்ஸ் மேல்நிலைப்பள்ளியில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணயத்தின் சார்பில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு- | (தொகுதி -1 மற்றும் தொகுதி- IA) பதவிகளுக்கான தேர்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.





# சிறப்பாகப் பணியாற்றிய சிவகங்கை மாவட்டக் காவலர்களுக்கு டிஜிபி பாராட்டு: சான்றிதழ் மற்றும் பண வெகுமதி வழங்கி கௌரவிப்பு!

சிவகங்கை, செப்.28-
சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பாகப் பணியாற்றி குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தந்த காவல் ஆய்வாளர் மற்றும் வழக்குகளில் விரைந்து நடவடிக்கை எடுத்து களவு போன பொருட்களை மீட்ட காவல் உதவி ஆய்வாளர், காவலர் ஆகியோருக்கு தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் பாராட்டுச் சான்றிதழும் பண வெகுமதியும் வழங்கி கௌரவித்தார்.

மதுரையில் 26.09.2026 அன்று காவல்துறை ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சிவகங்கை மாவட்டத்தில் வழக்குகளில் திறம்படச் செயல்பட்ட காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலருக்கு தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் பாராட்டு தெரிவித்தார்.

போக்சோ வழக்குகளில் கடுமையான தண்டனை:

சிவகங்கை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட இரண்டு போக்சோ வழக்குகளை காவல் ஆய்வாளர் விமலா திறம்படப் புலன் விசாரணை மேற்கொண்டார். இதன் மூலம் குற்றவாளிகளுக்கு நீதிமன்றத்தில் கடுமையான தண்டனையைப் பெற்றுத் தந்தார்:

* முதல் வழக்கில் (Cr. No.16/2021) குற்றவாளிக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.4,000/- அபராதமும் பெற்றுத் தரப்பட்டது.

* இரண்டாவது வழக்கில் (Cr.No.03/2023) குற்றவாளிக்கு 61 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.4,000/- அபராதமும் விதிக்கப்பட்டு தீர்ப்பு பெறப்பட்டது.

இத்தகைய சிறப்பான புலன் விசாரணையைப் பாராட்டி ஆய்வாளர் விமலாவுக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

23 குற்றவாளிகள் கைது நகைகள், ரொக்கம் மீட்பு:

இதேபோல் இளையான்குடி காவல் எல்லைக்குட்பட்ட வழக்கில் (Cr.No. 165/2026) துரிதமாகச் செயல்பட்டு 23 குற்றவாளிகளை அடுத்தடுத்து கைது செய்ததோடு, அவர்களிடமிருந்து 33 சவரன் தங்க நகைகள் மற்றும் ரூ.3,10,000/- ரொக்கப் பணத்தை மீட்டெடுத்தனர். இவ்வழக்கில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய காவல் உதவி ஆய்வாளர் சரவணகுமார் மற்றும் காவலர் முருகவேல் ஆகியோரும் பாராட்டப்பட்டனர்.

வழக்குகளைத் திறம்பட விசாரித்து நீதிமன்றம் மூலம் உரிய தண்டனை பெற்றுத் தந்ததிலும், எதிரிகளை உடனடியாகக் கைது செய்து களவுச் சொத்துக்களை மீட்டதிலும் சிறப்பாகச் செயல்பட்ட ஆய்வாளர் விமலா, உதவி ஆய்வாளர் சரவணகுமார் மற்றும் காவலர் முருகவேல் ஆகிய மூவருக்கும் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் பாராட்டுச் சான்றிதழ்களையும், பண வெகுமதியையும் வழங்கிப் பாராட்டினார்.



ஊத்துக்கோட்டை அடுத்த கீழ்சிட்டரபாகத்தில்

# மருத்துவரின் வீட்டின் பூட்டை உடைத்து 3.5 சவரன் தங்க நகை திருட்டு 6 வாலிபர்கள் கைது

திருவள்ளூர், செப்.28-
திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை அருகே கீழ்சிட்டரப்பாக்கத்தில் மருத்துவர் வீட்டை பூட்டை உடைத்து 3.5 சவரன் தங்க நகை திருடியதாக வெங்கடேஷ் அஜித் த/பெ.வெங்கடேஷ் ஜெய்பிரகாஷ் (எ)குட்டி த/பெ. ரமேஷ்(வ-33) நவீன் த/பெ.பாலச்சந்தர் (வ-22),ரமேஷ் த/பெ.ராஜேந்திரன் (வ-36) மணிகண்டன் (எ) சாரப்பாம்பு த/பெ. வெங்கட்ராமன் உட்பட6 இளைஞர்கள் கைது.



# கிராண்ட்லைன் ஊராட்சியில் பனைவிதைகள் நடும் நிகழ்ச்சி

மாதவரம், செப்.28-
மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சி புழல் ஏரி உபரிநீர் செல்லும் கால்வாய் கரைமீது திருவள்ளூர் கிழக்கு மாவட்ட நாம் தமிழர் கட்சி சார்பில் பனை விதை நடும் நிகழ்ச்சி மாவட்ட செயலாளர் ஸ்ரீதர் ஏற்பாட்டில் நடைபெற்றது. மண்டல செயலாளர் இளங்கோவன், மாநில சுற்றுச்சூழல் பாசறை இணை செயலாளர் மணி ஆகியோர் கலந்துகொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு வேண்டி பனைவிதைகளை நட்டனர். இதில் புழல் மாவட்ட தலைவர் சற்குணன் நாம் தமிழர் கட்சியின் நிர்வாகிகள் நந்தகுமார், சுகுமார், மணிவேல், சரவணன், சரண் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

# திருப்பத்தூர் ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியின் சார்பில் அசோக் நகர் அரசு உயர்நிலைப் பள்ளியில் நாட்டு நலப்பணித்திட்ட முகாம் துவக்க விழா



திருப்பத்தூர், செப்.28-
திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த அசோக் நகர் அரசு உயர்நிலைப் பள்ளியில், ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியின் சார்பில் நாட்டு நலப்பணித்திட்ட முகாம் துவக்க விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியானது ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் இந்திராணி தலைமையில் நடைபெற்றது.

நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் திவ்யலட்சுமி அனைவரையும் வரவேற்று பேசினார். திருப்பத்தூர் ஹோஸ்ட் லயன்ஸ் சங்கத் தலைவர் பொறியாளர் விஜயபானு, நல்லாசிரியர் தமிழரசி, உதவித் தலைமையாசிரியர் நாகராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நாட்டு நலப்பணித்திட்ட முகாம் ஏழு நாட்கள் நடைபெறும் நிலையில், முதல் நாள் துவக்க விழாவில் முனைவர் பட்ட ஆய்வாளர் ரஜினி வானம் தொட்டு விடும் தூரம் என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

தொடர்ந்து தொல்லியல் பட்டயம் பெற்ற தலைமையாசிரியர் முனிசாமி, தூய நெஞ்சக் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் மற்றும் தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் மோகன் காந்தி ஆகியோர் தமிழர் தொல்லியல் சிறப்புகள் என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மாணவிகளின் போதைப் பழக்கம் மற்றும் காசநோய் இல்லாத இளைஞர்களை உருவாக்குவது என்னும் மையக் கருத்தினை கொண்டு விழிப்புணர்வு நாடகம், நடனம், பரதம், நாட்டு நலப்பணித்திட்டத்தின் முக்கியத்துவம் குறித்த கவிதை வாசிப்பு ஆகியவற்றை மாணவிகள் நிகழ்த்தினர்.

முன்னதாக பள்ளியின் வளாகம், விளையாட்டு மைதானத்தினை தூய்மை செய்து மரக்கன்று நட்டனர்.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் அன்னபூரணி, எலவம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் வீரமணி, இருபத்தைந்திற்கும் மேற்பட்ட மாணவிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் உதவி திட்ட அலுவலர் பிரேமா நன்றியுரை வழங்கினார்.



# சிறப்பு மனு முகாம் மூலம் பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது துரித நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினர்

தேனி, செப்.28-
தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில் தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் காவல் அதிகாரிகள் சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.சிறப்பு மனு முகாம் நடத்தப்பட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து புகார் மனு மீது உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து வரும் தேனி மாவட்ட காவல்துறையினரின் செயல் பொதுமக்கள் மத்தியில் காவல்துறை நண்பனாகவும், நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருப்பதாக பொதுமக்கள் தங்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து வருகின்றனர்.




# 4 வயது குழந்தை முதல் 40 வயது வரை... பழனியில் சுற்றுச்சூழலுக்காக கைகோர்த்த நூற்றுக்கும் மேற்பட்டோர் பசுமையான தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பேரணி

திண்டுக்கல், செப்.28–
திண்டுக்கல் மாவட்டம் பழனியில் அறம் பவுண்டேஷன் மற்றும் சூப்பர் ஆர்ட்ஸ் அகாடமி இணைந்து இந்த பிரம்மாண்ட விழிப்புணர்வு அமைதி பேரணியை நடத்தியது.

பழனி காவல் நிலையம் முன்பு தொடங்கிய இந்த பேரணி, முக்கிய வீதிகளான ஆர்.எப். ரோடு மற்றும் பேருந்து நிலைய சாலை வழியாக சென்று நிறைவடைந்தது.

வெறும் பேரணியாக இல்லாமல், ஒரு பசுமை புரட்சியாகவே இது அமைந்தது.

4 வயது பிஞ்சு குழந்தைகள் முதல் 40 வயது பெரியவர்கள் வரை, பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கைகோர்த்தனர்.

கைகளில் "பிளாஸ்டிக்-ஐ தவிர்ப்போம்", "மரம் வளர்ப்போம் - மழை பெறுவோம்" போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி, பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் நடந்து சென்றது அனைவரையும் கவர்ந்தது புவி வெப்பமயமாதலை தடுக்கவும், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்கவும், மரக்கன்றுகளை நட்டு பராமரிக்கவும் வலியுறுத்தி நடத்தப்பட்ட இந்த பேரணியின் இறுதியில், சுற்றுச்சூழலின் முக்கியத்துவம் குறித்து ஓவிய ஆசிரியர் மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார்.

பசுமை பழனிக்காக நடத்தப்பட்ட இந்த முயற்சிக்கு பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.



■ தமிழ்நாடு சேம்பர் ஆஃப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரியின் 102-வது பொதுக்குழு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அமைச்சர் நிர்மல் குமார், எம்.பி. சு.வெங்கடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் சேம்பர் தலைவர் ஜெகதீசனுக்கு அமைச்சர் நிர்மல் குமார் மற்றும் எம்.பி. சு.வெங்கடேசன் ஆகியோர் சால்வை அணிவித்து, கேடயம் (ஷீல்டு) வழங்கி கவுரவித்தனர். நிகழ்ச்சியில் ஸ்ரீதர் சுந்தரலிங்கம், நிப்பான் தனுஷ்கோடி, செல்வம், சத்யம், செந்தில், பார்மா கணேசன் மற்றும் சேம்பர் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை தமுக்கம் மாநாட்டு மையத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் கலந்து கொண்டு, கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு சீர்வரிசைகளை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், எம்.எல்.ஏ. எஸ்.ஆர். தங்கப்பாண்டியன், மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 420 மெகாவாட் மின் உற்பத்தி பாதிப்பு

மேட்டூர், செப்.28–
மேட்டூர் அனல் மின் நிலை யத்தில் சாம்பல் வெளியே ற்றும் பகுதியில் அடைப்பு ஏற்பட்டு, மின் மோட்டார்கள் பழுது காரணமாக 420 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 2 பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. முதல் பிரிவில் தலா 210 மெகாவாட் திறன் கொண்ட 4 அலகுகள் மூலம் 840 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இரண்டாவது பிரிவில் 600 மெகாவாட் திறன் கொண்ட ஒர் அலகு மூலம் 600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இரண்டு பிரிவுகளிலும் தினசரி 1,440 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்ப டுகிறது. இந்நிலையில் முதலாவது பிரிவில் 2 மற்றும் 4வது அலகில் மின் உற்பத்தி செய்து வெளியேறும் சாம்பல் ஒரு பகுதியில் தேக்கி வைக்கப்படுகிறது.

இதனை 1,000 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் பம்புகள் மூலமாக இரும்பு குழாய் வழியாக கொண்டு சென்று சுமார் 4 கி.மீ தூரத்தில் ஏரியில் விடப்படுகிறது.

இந்நிலையில் சாம்பல் தேக்கி வைக்கும் பகுதியில் அளவுக்கு அதிகமாக சாம்பல் தேக்கி யதால் மின்மோ ட்டார்கள், பம்புகள் பழுதாகி சாம்பல் வெளியே ற்றம் தடைபட்டுள்ளது. இதன் காரணமாக, 2 மற்றும் 4வது அலகில் 420 மெகாவாட் மின் உற்பத்தி தடைபட்டுள்ளது. இதனை சரி செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதையடுத்து, முதல் பிரிவில் 3 வது அலகில் வருடாந்திர பராமரிப்பு பணி கள் நடந்து வருவ தால் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டு ள்ளது. அனல் மின்நிலையத்தில் முதல் பிரிவில் முதல் அலகில் மட்டுமே மின் உற்பத்தி நடந்து வருகிறது.

840 மெகாவாட் முதல் பிரிவில் 180 மெகாவாட் மின் உற்பத்தி நடந்து வருகிறது. 600 மெகாவாட் கொண்ட 2வது பிரிவில் 400 மெகாவாட் மின்உற்பத்தி என மொத்தமாக 580 மெகாவாட் மின் உற்பத்தி நடந்து வருகிறது என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் கொண்ட 2வது பிரிவில் வருடாந்திர பராமரிப்பு பணிகள் விரைவில் தொடங்கவுள்ளன. அனல் மின் நிலையத்தில் அடிக்கடி மின் உற்பத்தி பாதிக்கும் சூழலால், தமிழகத்தில் மின் தட்டுப்பாடு அதிகமாக ஏற்பட வாய்ப்புள்ளது சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

# UPI MDR கட்டணத்திற்கு எதிராக மொபைல் ரீடெய்லர்கள் அக்டோபர் 2 "NO UPI DAY மொபைல் ரீடெய்லர்களுக்கு MDR விலக்கு வழங்க வேண்டும் AIMRA தமிழ்நாடு வலியுறுத்தல்

சென்னை, செப்.28–
₹2,000-க்கு மேற்பட்ட UPI Merchant Payments மீது விதிக்கப்பட உள்ள 0.4% Merchant Discount Rate (MDR) கட்டணத்திலிருந்து மொபைல் ரீடெய்லர்களுக்கு விலக்கு வழங்க வேண்டும் என All India Mobile Retailers Association (AIMRA) தமிழ்நாடு வலியுறுத்தியுள்ளது.

மொபைல் ரீடெய்லர்களின் நிகர லாப வரம்பு சுமார் 0.75% முதல் 1.50% வரை மட்டுமே உள்ள நிலையில், மொபைல் போன் விலை உயர்வு, விற்பனைச் சவால்கள் மற்றும் அதிகரித்து வரும் தொழில் செலவுகளுக்கு மத்தியில் MDR சுமை ரீடெய்லர்களின் செயல்பாட்டு செலவை மேலும் அதிகரிக்கும் என AIMRA தமிழ்நாடு தெரிவித்துள்ளது.

**ஆண்டுக்கு ₹500 கோடி கூடுதல் சுமை**

மொபைல் ரீடெய்லர் துறைக்கு ஆண்டுதோறும் சுமார் ₹500 கோடி அளவிற்கு கூடுதல் MDR சுமை ஏற்படலாம் என AIMRA சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே UPI டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை கட்டமைப்பைப் பயன்படுத்தும் நிலையில், குறைந்த லாபத்தில் இயங்கும் மொபைல் ரீடெய்லர் துறைக்கு ஏன் கூடுதல் MDR சுமை என்ற கேள்வியை AIMRA எழுப்பியுள்ளது.

அத்தியாவசிய மற்றும் குறைந்த லாபத் துறைகளுக்கு வழங்கப்படும் சிறப்பு கட்டண முறையைப் போலவே, மொபைல் ரீடெய்லர்களுக்கும் சிறப்பு MDR விகிதம் அல்லது முழுமையான விலக்கு வழங்க வேண்டும் என AIMRA தமிழ்நாடு கோருகிறது.

**அக்டோபர் 2 "NO UPI DAY"**

இந்தக் கோரிக்கையை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில், அக்டோபர் 2, காந்தி ஜெயந்தி அன்று "NO UPI DAY" என்ற அடையாள எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ள ரீடெய்லர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக

ரீடெய்லர் கடைகளில் UPI QR Code-ஐ கருப்பு துணியால் மூடி அடையாள எதிர்ப்பு பதிவு செய்தல், கடைகளில் பிரச்சார போஸ்டர்களை காட்சிப்படுத்துதல், சமூக



ஊடகங்கள் மூலம் MDR பிரச்சினையை பொதுமக்கள் மற்றும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லுதல், தேசிய மற்றும் மாநில அளவிலான முன்னணி ஊடகங்களில் இந்தப் பிரச்சினையை எடுத்துச் செல்லுதல்.

இந்த நடவடிக்கை Digital India அல்லது UPI பயன்பாட்டுக்கு எதிரானது அல்ல. ரீடெய்லர்களின் கூடுதல் நிதிச்சுமை குறித்து அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கும் நடவடிக்கை என AIMRA தமிழ்நாடு தெரிவித்துள்ளது.

**"ரீடெய்லர்களின் குரல் அரசாங்கத்தை சென்றடைய வேண்டும்"**

AIMRA தமிழ்நாடு State General Secretary திரு. Sreedhar கூறுகையில்:

"மொபைல் ரீடெய்லர்கள் பல ஆண்டுகளாக டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை ஏற்றுக்கொண்டு, கோடிக்கணக்கான வாடிக்கையாளர்களை UPI போன்ற டிஜிட்டல் வசதிகளுடன் இணைப்பதில் முக்கிய பங்கு வகித்து வருகின்றனர்.

மிகக் குறைந்த லாப வரம்பில் செயல்படும் மொபைல் ரீடெய்லர்களுக்கு கூடுதல் MDR சுமை ஏற்பட்டால், அது அவர்களின் தொழில் செயல்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அத்தியாவசிய மற்றும் குறைந்த லாபத் துறைகளுக்கு வழங்கப்படும் சிறப்பு MDR கட்டண முறையைப் போலவே, மொபைல் ரீடெய்லர்களின் நிலையும் தனிப்பட்ட முறையில் பரிசீலிக்கப்பட வேண்டும்.

மொபைல் ரீடெய்லர்களுக்கு MDR விலக்கு அல்லது சிறப்பு கட்டண விகிதம் வழங்க வேண்டும் என்பதே எங்களது கோரிக்கை.

எங்களது நோக்கம் UPI அல்லது Digital India திட்டத்திற்கு எதிரானது அல்ல. மாறாக, டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை தொடர்ந்து ஆதரிக்கும் ரீடெய்லர்களுக்கு ஏற்படும் கூடுதல் நிதிச்சுமைக்கு ஒரு நடைமுறை தீர்வு காண்பதே நோக்கம்.

இந்த விவகாரம் குறித்து மொபைல் ரீடெய்லர் சங்கங்களின் பிரதிநிதிகளை அரசாங்கம் அழைத்து, எங்களது கருத்துகளை நேரடியாகக் கேட்டறிந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்."

என்று தெரிவித்தார்.

AIMRA தமிழ்நாட்டின் முக்கிய கோரிக்கைகள் 1.மொபைல் ரீடெய்லர்களுக்கு UPI MDR-ல் முழுமையான விலக்கு வழங்க வேண்டும், 2. விலக்கு சாத்தியமில்லையெனில், குறைந்த லாபம் கொண்ட மொபைல் ரீடெய்லர் துறைக்கு ₹5 flat MDR போன்ற சிறப்பு கட்டண முறையை பரிசீலிக்க வேண்டும், 3.மொபைல் ரீடெய்லர் சங்கங்களுடன் மத்திய அரசு மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகள் நேரடி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், 4.ரீடெய்லர்களின் நிகர லாப வரம்பை கருத்தில் கொண்டு MDR கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும், 5. டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் அதே நேரத்தில், சிறு மற்றும் நடுத்தர ரீடெய்லர்களின் தொழில் நிலைத்தன்மையும் பாதுகாக்கப்பட வேண்டும்

# தொண்டியில் இருதய விழிப்புணர்வு மாரத்தான்: 2,000-க்கும் மேற்பட்டோர் உற்சாக பங்கேற்பு

## இலவச இருதய மருத்துவ முகாமில் 250-க்கும் மேற்பட்டோருக்கு பரிசோதனை

தொண்டி, செப்.28
உலக இருதய தினத்தை முன்னிட்டு, ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி ரோட்டரி கிளப் கோல்டன் மற்றும் AVK மருத்துவமனை சார்பில் மாபெரும் இருதய விழிப்புணர்வு மாரத்தான் மற்றும் இலவச இருதய மருத்துவ முகாம் நடைபெற்றது.

தொண்டியில் முதன்முறையாக நடைபெற்றதாகக் கூறப்படும் இந்த மாரத்தான் போட்டியை ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். 8 முதல் 15 வயது, 16 முதல் 40 வயது, 45 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் பெண்களுக்கான தனிப்பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் 2,000-க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள், கேடயங்கள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பங்கேற்பாளர்களுக்கு பழங்கள், பிஸ்கட், குளுக்கோஸ் மற்றும் குடிநீர் வழங்கப்பட்டதுடன், தேவையான மருத்துவப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

மேலும், அவசர காலங்களில் உயிரைக் காக்க உதவும் CPR முதலுதவி குறித்த செய்முறை விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து AVK மருத்துவமனையில் நடைபெற்ற இலவச இருதய மருத்துவ முகாமில் 250-க்கும் மேற்பட்டோர் மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டனர். இதில் 100 பேருக்கு இலவச Echo பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், ECG, ரத்த சர்க்கரை, ரத்த அழுத்தம், ரத்தப் பரிசோதனை மற்றும் இருதய மருத்துவ ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

டாக்டர் சேகர் வேளாணி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரோட்டரி மாவட்டம் 3212 ஆளுநர் G. Gandhi Krishnan உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.






பொதுமக்களின் பெரும் பங்கேற்புடன் நடைபெற்ற மாரத்தான் மற்றும் மருத்துவ முகாம், இருதய ஆரோக்கியம் மற்றும் உயிர்காக்கும் முதலுதவி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வாக அமைந்தது.

# கொலை வழக்கில் சிறாருக்கு 2 ஆண்டு சிறை!

## சாட்சிகள் மூலம் குற்றம் நிரூபணம் மதுரை இளம் சிறார் நீதிக் குழுமம் அதிரடி தீர்ப்பு

மதுரை: செப், 28–
மதுரை மாநகர் கீழத்துரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இருளப்பன் கோவில் தெருவில், கடந்த 21.12.2024 அன்று முன்விரோதம் காரணமாக கருப்பையா என்பவர் ஆயுதங்களால் தாக்கி கொலை செய்யப்பட்டார்.

இந்த கொலை வழக்கில் அதே பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறார் ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து கீழத்துரை காவல் நிலைய போலீசார் சிறாரை பிடித்து விசாரணை நடத்தி, கூர்நோக்கு இல்ல பாதுகாப்பில் வைத்தனர்.

தொடர்ந்து மதுரை அரசு இளம் சிறார் நீதிக் குழுமத்தில் நடைபெற்ற சாட்சிகள் விசாரணையில், சிறார் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து 24.09.2026 அன்று தீர்ப்பு வழங்கிய இளம் சிறார் நீதிக் குழும நடுவர், சிறாருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து, செங்கல்பட்டு அரசு சிறப்பு இல்லத்தில் பாதுகாப்பில் வைக்க உத்தரவிட்டார்.

# ஆயுத பூஜை, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னை- மும்பைக்கு சிறப்பு ரயில்

திருவண்ணாமலை, செப்.28–
புரட்டாசி மாத பௌர்ணமியானது வெள்ளிக்கிழமை இரவு 10.44 மணிக்கு தொடக்கி நேற்று சனிக்கிழமை இரவு 11மணிவரை நீடித்தது. இந்த பௌர்ணமியில் லட்சக்கணக்கான பக்தர்கள் திருவண்ணாமலைக்கு வருகை தந்து அண்ணாமலையாரை வழிபட்டு சொந்த ஊர்களுக்கு சென்றனர். இருப்பினும் இன்று ஞாயிறு விடுமுறை என்பதால் இன்று காலை முதலே, ஆந்திரா. கர்நாடக, கேரளா போன்ற வெளிமாநில பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. அதிகாலை 5.30 மணிக்கு நடை திறக்கப்பட்டு பக்தர்கள் காலை 6மணி அளவில் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட்டன.

பொது தரிசனத்துக்கு வரக்கூடிய பக்தர்கள் நான்கு மணிநேரம் காத்திருந்து ராஜகோபுரம் வழியாக உள்ளே சென்று அண்ணாமலையாரையும், உண்ணாமலையாரையும் வழிபாடு பிரம்மஜன கோபுரம் வழியாக வெளியே சென்றனர். அதேபோல 50ரூபாய் தரிசனக் கட்டணம் வழியாக வரக்கூடிய பக்தர்களை, வடக்கு கோபுரம் வழியாக உள்ளே சென்று சாமி தரிசனம் செய்து பிரேமஜன கோபுரம் வழியாக வெளியேச்சபட்டனர் . நீண்ட வரிசையில் காத்திரு க்கின்ற பக்த ர்களுக்கு கோயில் நிர்வாகம் சார்பில் நீர், மோர் பழவகைகள் மற்றும் பிஸ்கட்டுகள் வழங்கி வருகின்றன. அதே போல் வரிசையில் நின்று வரக்கூடிய பக்தர்களுக்கு காற்றோட்ட வசதிக்காக ராட்சத மின்விசிறிகள் ஏற்பாடு செய்து பக்தர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதேபோல கடந்த பௌர்ணமி முதல் இன்றைய தினம் பிற்பகல் வரை அண்ணாமலையார் கோயிலில் மட்டும் சுமார் ஒரு லச்சத்து ஐம்பத்தாயிரம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளதாக கோயில் நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

present sale for all over Tamil Nadu
தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## மாணவர்களுக்கு அறிவியலை அறிமுகப்படுத்திய சிக்ரி கல்விச் சுற்றுலா மானாமதுரை பாபா பள்ளி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்பு





மானாமதுரை, செப்.28-

வகுப்பறையில் கற்கும் பாடங்களோடு நேரடி அனுபவத்தையும் இணைக்கும் வகையில், மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளி மற்றும் பாபா நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி சார்பில் மாணவர்களுக்கு காரைக்குடியில் உள்ள சிக்ரி ஆராய்ச்சி மையத்திற்கு கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டது.

கல்விச் சுற்றுலாவில் மாணவ, மாணவிகள் ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் கலந்து கொண்டனர். சிக்ரி ஆராய்ச்சி மையத்தை பார்வையிட்ட மாணவர்கள், அங்குள்ள பல்வேறு அம்சங்களை நேரில் கண்டு அறிந்து புதிய தகவல்களையும் அனுபவங்களையும் பெற்றனர்.

மேலும், காரைக்குடி பகுதியின் சிறப்புகள், வரலாறு, பாரம்பரியம் மற்றும் இயற்கைச் சூழல் குறித்தும் மாணவர்கள் அறிந்து கொண்டனர். நண்பர்களுடன் இணைந்து பல்வேறு இடங்களைப் பார்வையிட்டது மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் கூடிய கற்றல் அனுபவமாக அமைந்தது.

பள்ளித் தாளாளர் R. கபிலன், மாணவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கி, பாதுகாப்பான முறையில் கல்விச் சுற்றுலாவை வழிநடத்தினார்.

பள்ளி நிர்வாகி R. மீனாட்சி, "கற்றல் என்பது வகுப்பறைக்குள் மட்டுமல்ல; அனுபவங்களின் வழியாகவும் தொடர்கிறது" என மாணவர்களுக்கு எடுத்துரைத்து, கல்விச் சுற்றுலாவின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

கல்விச் சுற்றுலாவிற்கான ஏற்பாடுகளை பள்ளி முதல்வர் M. சாரதா மற்றும் ஆசிரியர்கள் செய்திருந்தனர். மாணவர்களின் மகிழ்ச்சியையும் அறிவுத் தேடலையும் ஒருங்கிணைத்த இந்தக் கல்விச் சுற்றுலா, அவர்களுக்கு பயனுள்ள அனுபவமாக அமைந்தது.

## நியோமேக்ஸ் மோசடி: பணத்தை மீட்க மாபெரும் போராட்டம் வெடிக்கும் மானாமதுரை சங்க பொதுக்குழுவில் அதிரடி தீர்மானங்கள்



மதுரை, செப்.28-

நியோமேக்ஸ் நிதி நிறுவன மோசடியில் பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்களின் உரிமைப் போராட்டத்தை தீவிரப்படுத்தும் நோக்கில், மானாமதுரை சங்க முதலீட்டாளர்கள் பொதுக்குழு கூட்டம் மதுரையில் உள்ள திருமண மஹாலில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சங்கத் தலைவர் அழகுமலை மற்றும் செயலாளர் கணேஷ் ஆதித் தலைமை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக மதுரை மாநகராட்சி பொறுப்பு மேயர் தோழர் T. நாகராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாவட்டச் செயலாளர் கணேசன் மற்றும் சிபிஎம் கட்சி நிர்வாகிகள், தோழர்கள் பங்கேற்றனர். மேலும், தேனி லட்சுமிபுரம், நெய்வேலி, கும்பகோணம், ராமநாதபுரம், சிவகாசி (சவுத்சைட் - ரோசன்கான்), மயிலாடுதுறை உள்ளிட்ட பல்வேறு பகுதி சங்கங்களின் தலைவர்கள் மற்றும் 400-க்கும் மேற்பட்ட நிர்வாகிகள், பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் பணத்தை முழுமையாக மீட்க வலியுறுத்தி 7 முக்கிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன:

* பொருளாதார குற்றப்பிரிவின் தாமத த்திற்கு கண்டனம்: 40 மாதங்களாகியும் முதலீட்டாளர்கள் எண்ணிக்கை, மொத்த முதலீடு, குற்றவாளிகளின் சொத்து விவரங்களை முழுமையாகக் கண்டறியாமல் பொருளாதார குற்றப்பிரிவு காலதாமதம் செய்வதற்கு கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

* ஏல நடைமுறை பலனளிக்கவில்லை: உயர்நீதிமன்றம் அமல்படுத்திய சமரச ஏல நடைமுறை எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

* ஏல நடவடிக்கைகளை கேலிக்கூத்தாக்குவதை கண்டித்தல்: சொத்துகளை ஏலத்திற்கு எடுப்பதும், பின்னர் அதை ரத்து செய்ய முயற்சிப்பதுமான நடவடிக்கைகளுக்கு கூட்டத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

* மாற்று வழியை யோசிக்க கோரிக்கை: ஏலம் மூலம் போதிய நிதி திரளாத காரணத்தால், நீதிமன்றம் மாற்றுத் தீர்வு குறித்து யோசிக்க வேண்டும்.

* நிறுவன சொத்துக்களை விற்று முழு செட்டில்மென்ட்: வரும் 30-ஆம் தேதியுடன் ஏல நிகழ்வுகளை நிறுத்திவிட்டு, உயர்நீதிமன்ற கண்காணிப்பில் மீதமுள்ள நிறுவன சொத்துக்களை அந்த நிறுவனமே 6 மாத காலத்திற்குள் விற்று முதலீட்டாளர்களுக்கு முழுப் பணத்தையும் திரும்ப வழங்க உத்தரவிட வேண்டும்.

* மாதாந்திர தீர்வு வழங்கல்: உண்மையான முதலீடு மற்றும் கமிஷன் பத்திரங்களை வகைப்படுத்தி, புகார் அளித்த தேதிகளின் அடிப்படையில் மாதம் தோறும் முன்னுரிமை தந்து தீர்வு காண வேண்டும்.

* மூத்த முகவர்கள் மீது நடவடிக்கை: முதலீட்டாளர்களிடம் நேரடியாக பணம் பெற்ற முதல் நிலை மூத்த முகவர்களைக் கண்டறிந்து குற்றவாளிப் பட்டியலில் சேர்க்க வேண்டும்; அவர்களை இரண்டாம் கட்ட செட்டில்மென்ட்டுக்கு கொண்டு வர வேண்டும்.

நீதிமன்ற நடவடிக்கைகளைத் தவறாகப் பயன்படுத்தி குற்றவாளிகள் காலதாமதம் செய்ய முயற்சித்தால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (CPM) தலைமையுடன் இணைந்து தமிழ்நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட மக்களைத் திரட்டி மிக பிரம்மாண்டமான தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என கூட்டத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.



## மதுராந்தகம் இடைத்தேர்தல்: நாகனி பா.செந்தில்குமார் தீவிர வாக்கு சேகரிப்பு

மதுராந்தகம், செப்.28-

மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் பணிகளில், சிவகங்கை மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளரும், முன்னாள் மாவட்ட கவுன்சிலருமான நாகனி பா. செந்தில்குமார், தனக்கு ஒதுக்கப்பட்ட மதுராந்தகம் தெற்கு ஒன்றியப் பகுதிகளில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

அப்பகுதிகளில் வாக்காளர்களை நேரில் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்கக் கோரி திமுகவினர் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

மதுராந்தகம் இடைத்தேர்தலில் திமுக வேட்பாளராக வழக்கறிஞர் இ. பரந்தாமன் போட்டியிடுகிறார்; வாக்குப்பதிவு அக்டோபர் 6-ஆம் தேதி நடைபெறுகிறது.







## மேடவாக்கம் ஊராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் காய்ச்சல் தடுப்பு பணிகள் தீவிரமாக நடைபெற்றது

மேடவாக்கம், செப்.28-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியம் மேடவாக்கம் ஊராட்சி (செப்டம்பர் : 27 )அன்று சுகாதார அலுவலர், சதீஷ் குமார் வழிகாட்டுதலின்படியும், வட்டார மருத்துவ அலுவலர் அறிவுறுத்தலின்படியும், மேடவாக்கம் ஊராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் காய்ச்சல் தடுப்பு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பணியின் ஒரு பகுதியாக வீடு வீடாகச் சென்று காய்ச்சல் கண்காணிப்பு, கொசுப்புழு ஒழிப்பு, தேவையற்ற நீர் தேங்கும் இடங்களை கண்டறிந்து அகற்றுதல் மற்றும் பொதுமக்களுக்கு டெங்கு தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சுகாதார ஆய்வாளர், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தலைமையில் களப்பணிகள் விரிவாக மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களுக்கு டெங்கு நோட்டீஸ் விடுவீடாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.





■ நீலகிரி மாவட்டம் குன்னூர் தாலுகா வெலிங்டன் கண்டோண்மென்ட் பகுதிக்கு உட்பட்ட ஜெயந்திநகர் கிராமத்தில் அமைந்துள்ள ராதேகிருஷ்ணர் திருக்கோவிலில் புரட்டாசி மாதம் இரண்டாவது சனிக்கிழமை பூஜை மிக சிறப்பாக நடைபெற்றது.இதில் பக்தர்கள் கலந்து கொண்டு ராதேகிருஷ்ணர் தரிசனம் பெற்றனர்.அதன் பிறகு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டன.



## சிக்ரியில் அறிவியல் உலகை நேரில் கண்ட கல்லல் முருகப்பா பள்ளி மாணவர்கள் 250-க்கும் மேற்பட்ட அறிவியல் மாதிரிகளை பார்வையிட்டு வியப்பு

காரைக்குடி, செப்.28-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அமைந்துள்ள மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிலையத்தை (சிக்ரி) கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பார்வையிட்டு, அறிவியல் ஆராய்ச்சிகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் குறித்து நேரடியாக அறிந்து கொண்டனர்.

சிக்ரியில் ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் பார்வையாளர்கள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு செப்டம்பர் 26 மற்றும் 27 ஆகிய இரண்டு நாட்கள் பார்வை யாளர்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில், இரண்டாவது நாளில் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 50 மாணவ, மாணவிகளை பட்டதாரி அறிவியல் ஆசிரியர் பிரபு அழைத்துச் சென்றார்.

அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த குரோமியம் முலாம் பூசுதல், மின்முலாம் பூசுதல், ஹைட்ரஜனைப் பயன்படுத்தி எரிபொருள் தயாரித்தல், நெகிழி தொடர்பான அறிவியல் செயல்முறைகள் மற்றும் பல்வேறு வகையான பேட்டரிகள் உள்ளிட்ட 250-க்கும் மேற்பட்ட அறிவியல் மாதிரிகளை மாணவர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

அறிவியல் மாநாடுகள், கண்காட்சிகள் மற்றும் அறிவியல் மையங்களுக்கு மாணவர்களை தொடர்ந்து அழைத்துச் சென்று, அவர்களிடையே அறிவியல் ஆர்வத்தை வளர்க்கும் பணியில் ஆசிரியர் பிரபு ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சிக்ரி பயணம் குறித்து மாணவர்கள் கூறுகையில், பாடப்புத்தகங்களில் மட்டுமே படித்து வந்த அறிவியல் கருத்துகள், கண்டுபிடிப்புகள் மற்றும் அவற்றின் நடைமுறைப் பயன்பாடுகளை நேரில் அறிந்துகொள்ள இந்தப் பயணம் வாய்ப்பளித்ததாக தெரிவித்தனர். இந்த அனுபவம் அறிவியல் பாடத்தின் மீதான தங்களது ஆர்வத்தை மேலும் அதிகரித்ததாகவும் கூறினர். சிக்ரி கலையரங்கில் அறிவியல், விளையாட்டு, சமூக அறிவியல் மற்றும் பொது அறிவு சார்ந்த வினாடி-வினா நிகழ்ச்சியும் நடைபெற்றது. இது பயனுள்ள அறிவுசார் அனுபவமாக அமைந்ததாக மாணவ, மாணவிகள் தெரிவித்தனர்.





■ திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பல்நோக்கு கூட்டரங்கில் நடைபெற்ற விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டத்தில் ஆத்துப்பாக்கம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் காக்கவாக்கம் டிபிசி மையத்துக்கு செல்வதற்கு அதிக சிரமப்படுவதாக வலியுறுத்தி ஆத்துப்பாக்கத்திற்கு புதிய டிபிசி மையம் அமைக்க வேண்டும் என விவசாயி சூர்யா மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - I (தொகுதி - I பணிகள்) முதல்நிலைத் தேர்வினை 2668 பேர் தேர்வு எழுதினர் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,தகவல்





தேனி, செப்.28-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - I (தொகுதி - I பணிகள்) முதல்நிலைத் தேர்வினை 2668 பேர் தேர்வு எழுதினர் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன்,தகவல்

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேனி நாடார் சரசுவதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்தில் நடைபெற்ற ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - I (தொகுதி - I பணிகள்)க்கான முதல்நிலைத் தேர்வினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தெரிவிக்கையில்:-

தேனிமாவட்டத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயத்தின் மூலமாக நடைபெறும் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு - I (தொகுதி - I பணிகள்) க்கான முதல்நிலைத் தேர்வு தேனி மாவட்டத்தில் 06 தேர்வு மையங்களில் அதாவது, தேனி நாடார் சரசுவதி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 300 விண்ணப்பதாரர்களும், பிரசன்டேஷன் கான்வென்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 300 விண்ணப்பதாரர்களும், தேனி மேலப்பேட்டை இந்து நாடார் உறவின்முறை மெட்ரிக் பள்ளியில் 300விண்ணப்பதாரர்களும், தேனி நாடார் சரசுவதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 600 விண்ணப்பதாரர்களும், தேனி மேரி மாதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 600 விண்ணப்பதாரர்களும், தேனி கம்மவார் சங்கக் கல்வி நிறுவன வளாகத்தில் 1447 விண்ணப்பதாரர்களும் என மொத்தம் 3547 விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுத விண்ணப்பித்திருந்தனர். இன்று நடைபெற்ற தேர்வில் 2668 (75 சதவீதம்) பேர் தேர்வு எழுதினார்கள். தேர்வு மையங்களில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ள 02 முதன்மைக் கண்காணிப்பாளர்களும், 03 மொபைல் பார்டியும் பணி மேற்கொண்டனர். மேலும், தேர்வு மையங்களில் தேர்வினைக் கண்கா ணிப்பதற்கு 2 அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவல ர்களும் வருகைபுரிந்துள்ளனர். தேர்வு எழுத வருகின்ற விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் தேர்வு நடைபெறும் தேர்வு மையங்களுக்கு சென்றடை வதற்கு அனைத்து வழித்தடங்களிலும் பேருந்து வசதிகள் சிறப்பாக ஏற்பாடு செய்ய ப்பட்டு இயக்கப்பட்டது. தேர்வு மையங்களில் இருக்கைகள், தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகளும், தீயணைப்புத் துறையின் மூலம் மாவட்ட கருவூலத்திற்கு தேவையான தீயணைப்பு வண்டிகள் நிறுத்துவதற்கும் மற்றும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. தேர்வு மையங்களில் தேர்வு எழுதக்கூடிய மாற்றுத்திறனாளிகள் இருப்பின் அவர்களை அந்தந்த தேர்வு மையத்தின் தரைத்தளத்தில் இருக்கை ஒதுக்கீடு செய்து, தேர்வு எழுத உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தேர்வு நடைபெறும் மையங்களில் தேர்வு நடைபெறும் நேரங்களில் தடையில்லா மின்சாரம் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின் போது, பெரியகுளம் சார் ஆட்சியர். தவலேந்து,மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161